விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 24 திங்கட்கிழமை (07.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 139

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இலங்கை அரசு மீது அமெரிக்காவும் சீற்றம்



## றிச்சட் பௌச்சர் கொழும்பு விரைகிறார்

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்று வரும் மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், செனட்சபை உறுப்பினர்களின் அழுத்தம் காரணமாக தெற்கு மற்றும் மத்திய பகுதிகளுக்கான அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சின் உதவிச் செயலாளர் றிச்சட் பௌச்சர் கொழும்புக்கு வருகைதரவுள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் இரண்டு பெண் மேஜர் ஜெனரல்கள்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரல்களாக இந்திக விஜயரட்ன மற்றும் முகந்தி பீரிஸ் ஆகிய இரு பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவத்தில் மேஜர் ஜெனரல் பதவிகளுக்கு தற்போதுதான் பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே கேணல் நிர்மல் தர்மரட்ன சிறப்பு அதிரடிப்படை படையணியின், தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை அப்பொறுப்பிலிருந்த

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் தாக்குதல் 5 இராணுவத்தினர் பலி

(மன்னார்)

மடுப்பிரதேசத்திலுள்ள பெரிய தம்பனைப் பகுதியை நோக்கி நேற்றுக்காலை முன்னேற முயன்ற இராணுவத்தினர் மீது தாங்கள் எதிர் தாக்குதல் நடாத்தி அவ் முயற்சி முறியடிக்கப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளார்கள்.

இம் மோதல் சம்பவத்தின்போது ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் இறந்தவர்களின் சடலங்கள் மற்றும் ஆயுத தளபாடங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

இம் மோதல் சம்பவங்கள் காரணமாக மடுப்பிரதேச கிராமங்களிலுள்ள மக்கள் இடம் பெயர்ந்து தட்சனா மருதமடு என்ற இடத்திலுள்ள

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க விமானப்படை பிரிவுகள் ஹிங்குராங்கொடைக்கு மாற்றம்


(கொழும்பு)

வானில் வைத்தே எதிரிகளது விமானங்களை தாக்கக்கூடிய புதிய விமான எதிர்ப்புப் பிரிவை விரைவில் அமைக்க விமானப்படை திட்டமிட்டுள்ளது. ஹாடின் ஷெல்டர் என்று இந்த பிரிவு அழைக்கப்படுமென விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அண்மையாக அமைந்துள்ள விமானப்படைத்தளத்தின் சில முக்கிய பிரிவுகளை ஹிங்குராங் கொடையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் விமானப்படைத் தளம் அமைந்திருப்பது குறித்து எழுந்த விமர்சனங்கள் குறித்து அமைச்சர்கள் பலர் அரசினதும் பாதுகாப்பு பிரிவினரினதும் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே கட்டுநாயக்கா விமானப்படைப் பிரிவினது சில பகுதிகளை ஹிங்குராங்கொடைக்கு மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்

(04 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்களின் தனி அரசை இந்தியா விரும்பவில்லை

### ஓய்வுபெற்ற இந்திய இராணுவ அதிகாரி தகவல்

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு தனி அரசு

பேசுகையில், இலங்கை இனப்பிரச்சினையானது தொடரக்கூடாது என்று இந்தியா

(சென்னை)

இலங்கையில் தமிழர்களுக்கு தனி அரசு அமைவதனை இந்தியா விரும்பவில்லை என்று ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரியான லெப் ஜெனரல் ராகவன் தெரிவித்துள்ளார். இந்திய கடற்படைக் கப்பலான சாரங்கில் கடற்படையினரிடையே ராகவன் பேசுகையில், இலங்கை இனப்பிரச்சினையானது தொடரக்கூடாது என்று இந்தியா கருதுகிறது. ஆனால் அதனை விரைவில் முடிபுக்கு நம்மால் கொண்டுவர முடியாது.

இலங்கையில் தமிழர்களுக்கு தனி அரசு அமைவதில் இந்தியாவுக்கு விருப்பம் இல்லை. (04 ஆம் பக்கம் பார்க்க)



ரஷ்யாவிலிருந்து இலங்கை அரசினால் கொள்வனவு செய்யப்பட்ட மிக்-29 ரக தாக்குதல் விமானம் - விரிவான செய்தி உள்ளே.

# இலங்கை அரசை கண்டிக்கும் தீர்மானம் ஐரோ.பாராளுமன்றத்தில் நிறைவேறும்

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களை முடிபுக்குக் கொண்டுவர வலியுறுத்தியோ அல்லது இலங்கை அரசாங்கத்தை கண்டனம் செய்தோ ஐரோப்பிய நாடாளுமன்றத்தின் அபிவிருத்திக்குழு தீர்மானம் நிறைவேற்ற முடிபு செய்துள்ளது.

பிரித்தானிய நாடாளுமன்றத்தில் இலங்கை நிலைமைகள் குறித்து முக்கியத்துவம் வாய்ந்த வாதம் மூன்று மணிநேரம் நடைபெற்றதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்திலும் இத்தகைய விவாதம் நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய அபிவிருத்திக்குழுவின் இலங்கை நிலைமைகள் தொடர்பான கூட்டம் எதிர்வரும் யூன் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் இந்தோனேசியா மற்றும் இலங்கை நாடுகளில் ஆழிப்பேரலைக்குப் பின்னரான நிலைமைகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளன. (ந-5)

# மகிந்தவின் அவசர செய்தியுடன் லலித் வீரதுங்க டில்லி பயணம்

(கொழும்பு)

இலங்கை நிலைமைகள் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு விளக்கமளிக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளர் லலித் வீரதுங்க புதுடில்லி சென்றுள்ளார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வுத்திட்டம் விடுதலைப்புலிகளின் வான் தாக்குதல்கள் உள்ளிட்டவை குறித்து இந்தியப் பிரதமருக்கு மகிந்த கொடுத்தனுப்பிய தகவல்களை லலித் வீரதுங்க கையளித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

புதுடில்லியில் லலித்வீரதுங்க முகாமிட்டிருந்த போதே கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(பொன்னாலை)

பண்டத்தரிப்பு தெல்லிப்பழை வீதியில் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளினால் நேற்றுக் காலை 7.30 மணியளவில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். சம்பவத்தில் வடலி அடைப்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மணியசேகரம் விக்னேஸ்வரன் (வயது 42) என்ற குடும்பஸ்தரே சுட்டுக் (04 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக் குழுவினரின் பணிக்கு வட-கிழக்கு நிலைமை சவாலாக உள்ளது

(கொழும்பு)

இலங்கையின் வடக்குக்கிழக்கு நிலைமையானது எமது பணிகளுக்கு சவால் விடும் வகையில் உள்ளது என்று இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் லார்ஸ் ஜோஹான் சொல்பேர்க் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் தொடக்க நாட்களை ஒப்பிடுகையில் புதிய இராணுவ நகர்வுகளும் இராணுவ பலமும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இது மிகவும் எதிர்மறையானது. இது தொடர்பில் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கவலைகொள்கிறது. இனப்பிரச்சினையில் பெருந்தொகையான மக்கள் கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் . (04 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டிப் பகுதியில் குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கலைநகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டுக்குச்சென்ற ஆயுததாரிகளினால் குடும்பஸ்தர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் இலங்கை மின்சார சபையின் சுன்னாக அலுவலகப் பணியாளரும் 5 பிள்ளைகளின் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# விடுதலைப்புலிகளின் விமானங்களை சாம்-16 ஏவுகணையால் தாக்க முடியவில்லை

## சண்டே ரைம்ஸில் இக்பால் அத்தாஸ்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் வானூர்திகளை நோக்கி இருமுறை சாம்-16 ரக ஏவுகணைகளை ஏவ முயற்சித்த போதும் அது கைகூடவில்லை என்று இராணுவத்தினர் கவலையடைந்திருப்பதாகக் கொழும்பு வார ஏடான சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

சண்டே ரைம்ஸ் வார ஏட்டின் பாதுகாப்பு ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இது தொடர்பாக தெரிவித்துள்ளதாவது,

பல லட்சக்கணக்கான மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தைக் கண்டு களித்துக் கொண்டிருந்தனர். தமது வீடுகளில், களியாட்ட விடுதிகளில், சமூக நலக் கூடங்களில், மைதானங்களில் அகண்ட தொலைக் காட்சித் திரைகளில் துடுப்பாட்டப் போட்டியின் நேரடி ஒளிபரப்பு ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது.

அப்போது கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் திடீரென மின்சாரம் தடைப்பட்டதுடன் வெடி ஓசைகளும் கேட்கத் தொடங்கின. கொழும்பு தாக்குதலுக்குள்ளாகியுள்ளதாக செய்திகள் பரவின. பதற்றமடைந்த மக்கள் தமது வீடுகளுக்குச் சிதறி ஓடத் தொடங்கினர். பல்வேறு பகுதிகளிலுமிருந்து வானை நோக்கி கண்டபடி தாக்குதல்களை நடாத்திய படையினர், மக்களின் இந்தப் பதற்றத்தை மேலும் அதிகரித்திருந்தனர்.

கொழும்புத்துறைமுகத்தை விடுதலைப் புலிகளின் விமானக் குண்டுவீச்சிலிருந்து பாதுகாக்கும்முகமாக கடற்படைக் கப்பல்களிலிருந்தும் வானை நோக்கி தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதனால் துறைமுகம் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளதாக வதந்திகள் பரவின. ஜனாதிபதிமாளிகையிலிருந்து நடாத்தப்பட்ட தாக்குதலால் ஜனாதிபதி மாளிகை மீது வான் தாக்குதல் நிகழ்வதாக வதந்திகள் பரவ வழி வகுத்துவிட்டன.

இதேபோன்று இராணுவத் தலைமையகம், இரத்மலானை வான் படைத் தளம் எல்லாம் தாக்குதலுக்குள்ளாவதாக வதந்திகள் பரவின. உண்மையில் என்ன நடைபெறுகிறதுஎன்பதனை பாதுகாப்புத் துறையும் இராணுவத்தினரும் குறிப்பிட்டளவு நேரம் உணர முடியாதவர்களாகவே இருந்தனர்.

கட்டுநாயக்கா வான் படைத் தளத்திலிருந்து 101 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பாலாவியில் இரு வான் கலங்களை அவதானித்த பின்னர் அவற்றை மத்திய ராடர்களில் அவதானிக்க முடியவில்லை. பின்னர் உஸ்வெறிகெயாவாவில் அவற்றைக் கடற்படைப் படகு அவதானித்த போது இரு வானூர்திகளில் ஒன்று முத்துராஜவெலப் பகுதியை நோக்கியும் மற்றொன்று கொழும்புத்துறைமுகப் பகுதியை நோக்கியும் பிரிந்து செல்லத் தொடங்கின. முதலாவது வானூர்தி முத்துராஜவெலப் பகுதியிலுள்ள செல் எரிவாயு சேமிப்பு நிலையம் மீது இரு குண்டுகளை வீசியது. அதில் ஒன்று இரு சேமிப்புத் தாங்கிகளுக்கிடையில் வீழ்ந்து வெடித்ததில் தீயணைப்புத் தடுப்பு இயந்திரம் சேதமடைந்தது.

இந்த மையத்தில் உள்ள கோபுரத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்த சிவப்பு மின் விளக்கானது வானோடி இலகுவாக இலக்கின் மீது குண்டை வீச உதவியதாக படைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பின்னர் மீண்டும் திரும்பிய வானூர்தி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுஸ்தாபன சேமிப்புப் பகுதி மீது குண்டுகளை வீசியது. இரண்டாவது வானூர்தி கொலன்னாவ நோக்கிச் சென்று குண்டுகளை வீசியது. முதலாவது குண்டு டீசல் சேமிப்புத்தாங்கியின் அருகில் வீழ்ந்து வெடித்தது. அங்கு வீசப்பட்ட இரண்டாவது குண்டு வெடிக்கவில்லை. அது 35 கிலோக் கிராம் எடையும் ஒரு மீற்றர் நீளமும் சி-4 வெடிமருந்துகளையும் இரும்புக் குண்டுகளையும் கொண்டதாகும்.

மூன்றாவது குண்டு வீசப்பட்டதாக கூறப்படுகின்ற போதும் அதனை இன்று வரை உறுதிப்படுத்த முடியவில்லை. இதனிடையே தம்மிடம் உள்ள சாம்-16 ரக ஏவுகணையால் விடுதலைப் புலிகளின் வானூர்தியை சுட்டு வீழ்த்த முடியவில்லை என்று படைத் தரப்பினர் கவலையடைந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல் அச்சம் காரணமாக இந்த ஏவுகணைகளுடன் வான் படையினர் கொலன்னாவ பகுதியில் தயாராகவேயிருந்தனர். அவர்களுடன் பாதுகாப்புக் கட்டளை மையம் தொடர்ச்சியான தொடர்புகளை மேற்கொண்டு தகவல்களைப் பரிமாறி வந்தது.

வான்படையினர் வானூர்தியின் ஒலியை தெளிவாகக் கேட்ட போதும் அவர்களின் சாம்-16 ரக ஏவுகணையினால் விடுதலைப் புலிகளின் வானூர்தியை தனது தாக்குதல் இலக்கிற்குள் கொண்டு வர முடியவில்லை.

ஆனால் 15 செக்கன்களில் ஏவுகணையின் மின்கலம் செயலிழந்துவிட்டது. பின்னர் மற்று மொரு ஏவுகணையை சுடு நிலைக்குக் கொண்டு வந்தனர். மிகவும் இருளாக இருந்தது. எனவே வானூர்தியை ஏவுகணையின் இலக்கிற்குள் கொண்டு வர முடியவில்லை.

கொலன்னாவவில் குண்டை வீசிய பின்னர் வானூர்தி பொறளை, நுகேகொட வழியாக இரத்மலானை நோக்கிச் சென்றது. ஆனால் அவை எப்படி வன்னிக்குச் சென்றன என்பது குறித்துத் தெரியவில்லை.

இதுவிடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்ட 4- வது வெற்றிகரமான வான் தாக்குதலாகும். மார்ச் 26 கட்டுநாயக்கா மீதான தாக்குதல், ஏப்ரல் 23 பலாலி தளம் மீதான தாக்குதல், ஏப்ரல் 26 கட்டு நாயக்கா மீதான தாக்குதல் முயற்சி, ஏப்ரல் 29 கொலன்னாவ, முத்துராஜவெல பகுதிகள் மீதான தாக்குதல்கள் என்பன இந்த 4 நான்கு தாக்குதல்களும் ஆகும்.

விடுதலைப்புலிகளிடம் 5 செக்கோஸ்லாவாக்கிய தயாரிப்பான Zlin-143 ரக வானூர்திகள் உள்ளதாகவும் அவையே இந்த 4 தாக்குதல்களிலும் பங்கு பற்றியதாகவும் இராணுவம் கூறியுள்ளது. எனினும் விடுதலைப்புலிகளிடம் தற்போது 10 வானூர்திகள் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

*SA-16 GIMLET தொடர்பான சில தகவல்கள்:-*

சோவியத்தின் தயாரிப்பான இந்த வானூர்தி எதிர்ப்பு ஏவுகணை மனிதர்களால் காவிச் செல்லக் கூடியதாகும். இது தாழ்வாகப் பறக்கும் வானூர்திகள் மற்றும் உலங்கு வானூர்திகளை தாக்கியழிப்பதற்கு என உருவாக்கப்பட்டது.

இது சாம்-7, சாம்-14 ஆகியவற்றின் நவீன வடிவமாகும். 1986 ஆம் ஆண்டு பாவனைக்கு வந்த இந்த ஏவுகணைகள் சாம்-189 M 39 ஏவுகணைகளை விட தாக்கியழிக்கும் வலிமையை அதிகம் கொண்டவை.

இது கடந்த ஊதா வழிகாட்டிகளை உடையதுடன் இரு IRமற்றும் UV என வர்ணங்களைத் தேடிச் செல்லக் கூடியது. இரு வர்ண வழிகாட்டிகளைக் கொண்டிருப்பதனால் வானூர்திகளிலிருந்து வீசப்படும் FLARES ரக எதிர்ப்புச் சாதனங்களின் பாதிப்புக்களை சாம்-16 குறைக்கக் கூடியது. 5 ஆயிரம் மீற்றர் தூர வீச்சுடைய சாம்-16 ஏவுகணை 3 ஆயிரத்து 500 உயரங்களில் பறக்கும் வானூர்திகளை வீழ்த்த வல்லது.

வேகம் ஒலியின் இருமடங்கு. தாக்குதல் உயரம் 3 ஆயிரத்து 500 மீற்றர். தாக்குதல் தூர வீச்சு 500-5 ஆயிரம் மீற்றர். ஏவுகணையின் தாக்கும் பகுதி 2 கிலோகிராம். வழிகாட்டி IR மற்றும் UV. (ந-5)

## இலங்கை அமைச்சர்களைச் சந்திக்க தமிழக முதல்வர் கருணாநிதி மறுப்பு

(சென்னை)

இலங்கை அமைச்சர்களைச் சந்திக்க தமிழக முதல்வர் கருணாநிதி மறுத்துள்ளதாகத் தெரிகிறது. அண்மையில் அமைச்சர் பி.சந்திரசேகரன், முதல்வர் கருணாநிதியை சந்திக்க அனுமதி கேட்டிருந்ததாகவும் ஆனால் கருணாநிதியின் சட்டமன்றப் பொன் விழாவைச் சுட்டிக்காட்டி சந்திரசேகரனுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இருப்பினும் ஈழத் தமிழ் மக்களைப் படுகொலை செய்து வரும் இலங்கை அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள ஒருவரை சந்திக்க விரும்பாததால்தான் மலையகக் கட்சியைச் சேர்ந்த சந்திரசேகரனுக்கும் கூட அனுமதி மறுக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ந-5)




ஸ்ரான்லி வீதியிலுள்ள யூனியன் அஷ்ரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ். கிளை அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற 5 ஆம் ஆண்டுநிறைவு நிகழ்வின்போது நிறுவனத்தின் முகாமையாளர் சி.என்.மதிவதனன் கேக் வெட்டி கொண்டாடுவதனைப் படத்தில் காணலாம்.

# யாழ்.பல்கலைக்கழகத்திற்குள் ஆயுதக் குழு அத்துமீறி நுழைவு

## பதில் துணைவேந்தர், பீடாதிபதிகள் கூட்டறிக்கை

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த சனிக்கிழமை அதிகாலைவேளை இடம்பெற்ற சம்பவம் தொடர்பில், யாழ்.பல்கலைக்கழக பதில் துணைவேந்தரும் அனைத்துப்பீடாதிபதிகளும் ஒப்பமிட்டுக் கூட்டறிக்கை ஒன்றினை நேற்று வெளியிட்டுள்ளனர். அதன் விபரம் வருமாறு,

கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.40 மணியளவில் தம்முகங்களைக் கறுப்புத் துணியால் மறைத்துக் கொண்ட ஆயுதம் தாங்கிய சிவில் உடை தரித்த சுமார் 10 பேர் அடங்கிய குழுவொன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் வடக்குப் பக்க மதிலூடாகப் பல்கலைக்கழகப் பிரதான வளாகத்துள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளது.

வடக்கு வாயிலருகே அமைந்துள்ள நீரிறைக்கும் இயந்திர இயக்குநரின் அறையில் நீரிறைக்கும் இயந்திர இயக்குநரும் வடக்கு வாயில் பாதுகாப்பு உத்தியோகஸ்தரும் விஞ்ஞான பீட வாயில் பாதுகாப்பு உத்தியோகஸ்தரும் இருந்துள்ளனர்.

நீரிறைக்கும் இயந்திரம் இயங்கிக் கொண்டிருந்திருக்கிறது. வளாகத்தினுள்ளே பிரவேசித்த குழு முதலில் இயந்திர இயக்குநரை அழைத்து மிரட்டியுள்ளது. அக்குழுவின் ஒரு பிரிவினர் தண்ணீர்த் தாங்கியின் மேலேறிப் பார்த்துள்ளனர்.

பின்னர் வடக்கு வாயிலுக்குப் பொறுப்பான பாதுகாப்பு உத்தியோகஸ்தரை அழைத்துச் சென்ற ஒரு பிரிவினர் பல்கலைக்கழக மாணவர் நிலையத்தைத் திறப்பித்து அங்கு மாடியிலிருந்த சில அறைகளைத் திறக்க முயற்சி செய்த பின் யன்னல்கள் வழியாக உள்ளே பார்வையிட்டுள்ளனர்.

பின்னர் மாணவர் நிலைய நுழைவாயிலில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த சமீப காலத்தில் அமரத்துவமடைந்த பல்கலைக் கழக மாணவர்களின் புகைப்படங்களை உடைத்து நொருக்கியுள்ளனர்.

நுழைவாயிலருகேயிருந்த அகதிகள் துயர் துடைப்பு உண்டியலும் உடைக்கப் பட்டுள்ளது.

இவற்றை முடித்துக் கொண்டு வெளியேறுகையில் இக் குழுவைச் சேர்ந்த ஒருவர் வடக்கு வாயில் பாதுகாப்பு உத்தியோகஸ்தரின் முகத்தில் இரு தடவை ஓங்கி அறைந்துள்ளார்.

இதனால் இவருடைய மூக்கிலிருந்து சிந்திய இரத்தத் துளிகளை அவ்விடத்தில் காணக் கூடியதாயிருந்தது.

இந் நிகழ்வுகள் பற்றி யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பதில் துணைவேந்தரின் அழைப்பை ஏற்று வருகை தந்த யாழ்.அரச அதிபர் சம்பவங்கள் இடம்பெற்ற இடங்களை நேரடியாகப் பார்வையிட்டுச் சென்றார். இச் சம்பவங்கள் பற்றி பலாலி யாழ்ப்பாணப் பாதுகாப்பு சேவைகள் கட்டளை அதிகாரிக்கும் தெரியப் படுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்துள் அத்துமீறிப் பிரவேசித்ததையும் கடமையிலிருந்த ஊழியர்களை மிரட்டியதையும் அவர்களுள் ஒருவரைத் தாக்கியதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அமரத்துவமடைந்த மாணவர்களின் புகைப் படங்களைச் சேதப்படுத்தியமை சக மாணவர்களின் உணர்வுகளைத் தூண்டும் மனித நேயமற்ற செயற்பாடாகும்.

இதுபோன்ற நிகழ்வுகள் மாணவர் மத்தியில் மீண்டும் பீதியை ஏற்படுத்தி பல்வேறு சாதகமற்ற சூழலின் மத்தியில் மீள ஆரம்பிக்கப்பட்ட யாழ்.பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளுக்குக் குந்தகம் விளைவித்துவிடும் என அஞ்சுகின்றோம். ஊழியர்கள் மிரட்டப்பட்டமையும் தாக்குதலுக்குள்ளானமையும் ஊழியரிடையேயும் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் யாராயிருப்பினும் அவர்களைப் பல்கலைக்கழகச் செயற்பாடுகளுக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளைத் தவிர்க்குமாறு விநயமாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

> ஒருவன் தான் பெற்ற சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் அளிக்க மறுத்தால் அவன் அயோக்கியன், களங்கம் உள்ளவன்.
>
> -இங்கர்சால்

வலம்புரி

## அச்சமற்ற சூழமைவை படைத்தரப்பு ஏற்படுத்த வேண்டும்

யாழ்.குடாநாட்டில் மக்களின் உறக்கம் என்பது பயங்கரமான பொழுதாகக் கழிகின்றது. எந்நேரமும் வீட்டுக் கதவு தட்டப்படலாம், பொன், பொருள் பறிபோகலாம், ஆட்கள் கடத்தப்படலாம் என்ற பயப்பீதி உறக்கத்திற்கு ஊறு விளைவித்து விடுகின்றது.

இத்தகைய அபாயமானதும், பயங்கரமானதுமான சூழலில் இரவோடிரவாக காணாமல் போனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்று கொண்டேயிருக்கின்றது.

பயங்கரமான சூழலின் நீடிப்பால் ஏற்படக் கூடிய இழப்புக்களுக்கு அப்பால் முதியவர்களும், சிறுவர்களும் நோயாளிகளாக மாறும் பரிதாபமும் மிகச் சொற்ப காலத்தில் ஏற்படவிருக்கும் விளைவாகும்.

இவை யாவற்றுக்கும் மேலாக இப்போது மாணவர்கள் கடத்தப்படுகின்றனர் என்ற செய்தி பெற்றோர்களின் குருதியை உறைய வைத்துவிட்டது.

இத்தகைய பயங்கரமான சூழ்நிலை குடாநாட்டிலிருந்து மக்களை வெளியேற்றிவிடும் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக யுத்தத்தின் அழிவுகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் குடாநாட்டு மக்கள். இந்த மண்ணில் வாழ முடியாதென்ற முடிபில் வெளிநாடுகளுக்குச் சென்றவர்கள் போக, எந்த நாட்டிற்குமே செல்ல முடியாது. செல்ல விரும்பமும் இல்லை என்ற நிலைப்பாடும், சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கையும் காரணமாகவே யாழ். குடாநாட்டில் மக்கள் வாழ்கின்றனர்.

மக்களின் வாழ்வு நிலைச் சூழல் இருப்பதனாலேயே யாழ்.குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்குப் படையினர் முனைப்புக் கொண்டனர்.

இந்நிலையில், ஆட்கடத்தல்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறும் போது அதனால் பொதுமக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு - பயங்கரம் எத்தகையது என்பதை பொதுமக்களின் பக்கத்திலிருந்து நோக்க வேண்டும்.

எனவே, யாழ்.குடாநாடு, இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதன் காரணமாகவும் பொலிஸ், நீதிமன்றங்கள் என்ற அரச நிர்வாகம் இயங்குவதன் காரணமாகவும் ஆட்கடத்தல்களையும், கொள்ளைச் சம்பவங்களையும் இடம்பெறாமல் தடுப்பது படையினரின் முக்கியமான பணியாகும்.

இதுவிடயத்தில் யாழ்.படைத் தளபதி உள்ளிட்ட படை உயர் அதிகாரிகள் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மக்களைப் பாதுகாப்பதே ஒரு ஜனநாயக அரசின் கடமையும், பொறுப்புமாகும்.

அவ்வகையில், யாழ்.குடாநாட்டில் இரவு வேளையில் - ஊரடங்கு அமுலில் இருக்கும் போது ஆட்கள், மாணவர்கள் கடத்தப்படுவதை தடுத்து நிறுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இதனை வலியுறுத்துவதாகப் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையாகும்.

# வானில் இடைமறித்து தாக்குதல் நடாத்த மிக்-29 ரக வானூர்திகள் கொள்வனவு

## ஆங்கில நாளேடு தகவல்

(கொழும்பு)

ரஷ்யாவிலிருந்து 5 மிக்-29 ரக தாக்குதல் வானூர்திகளை இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது என்று கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது. கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றில் வெளியான செய்தி வருமாறு,

விடுதலைப்புலிகளின் முதலாவது வான் தாக்குதலைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இலங்கை வான்படையின் விசாரணைக் குழு விடுதலைப்புலிகளின் வான்படையின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புக்களைத் தேடுவது குறித்து ஆராய்ந்து வருகின்றது.

ரஷ்யாவிலிருந்து 5 மிக்-29 ரக தாக்குதல் வானூர்திகளை இலங்கை அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது. இது விடுதலைப்புலிகளின் வான்படைக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகும்.

இந்த வானூர்திகள் முன்னாள் சோவியத் ஒன்றியத்தினால் வடிவமைக்கப்பட்டவை. தரமான வான் இடைமறிப்பு தாக்குதல் வல்லமையைக் கொண்ட இந்த வானூர்தி, 1970களில் மிகோயன் நிறுவனத்தினால் தயாரிப்பு வேலைகள் தொடங்கப்பட்டு 1983களில் சோவியத்தின் வான்படையில் சேர்க்கப்பட்டது.

இந்த வானூர்திகள் இந்தியா உட்பட பல நாடுகளில் பாவனையில் உண்டு. மிக்-29 ரக வானூர்தி அமெரிக்காவின் எஃப்-15 மற்றும் எஃப்-16 வானூர்திகளின் சவால்களை சமாளிப்பதற்காக உருவாக்கப்பட்டது. இதன் பிரதான பங்கு வானிலிருந்து வான்மீதான தாக்குதலாகும்.

எனினும் மெதுவாக நகரும் வானூர்திகளுக்கு எதிராக இது எத்தகைய பாத்திரத்தை வகிக்கப் போகிறது என்பது ஆவலான விடயம். மிக்-27 ரக வானூர்திகள் இலங்கை வான்படையிடம் ஏற்கனவே உள்ளன. இது முழுக்க முழுக்க தரைத் தாக்குதல் வானூர்தியாகும்.

வானில் வானூர்திகளை இடைமறித்துத் தாக்கும் வசதிகள் இதற்குக் கிடையாது. மிக்-29 வானூர்தியின் உலக சந்தை விலையானது 15 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 1980 களின் ஆரம்பத்தில் இந்தியாவும் மிக்-29 ரக வானூர்திகளின் உற்பத்தியைத் தொடங்கியது.

இலங்கையின் அதிகாரிகள் இந்தியா, பாகிஸ்தான், சீன அதிகாரிகளுடன் பேச்சுக்களை நாடத்திய போதும் சோவியத்திடமிருந்தே வானூர்திகளைக் கொள்வனவு செய்துள்ளனர்.

மேலும் தன்வசம் உள்ள கிபீர் வானூர்திகளையும் நவீனமயப்படுத்தி வானில் இடைமறித்துத் தாக்கும் வானூர்தியாக அதனை வடிவமைக்க இலங்கை அரசாங்கம் முயற்சிகளை எடுத்துள்ளது. இதற்காக ராடர்கள், வானிலிருந்து வானுக்குப் பாயும் ஏவுகணைகள் என்பவற்றை கிபீர் வானூர்திகளுக்குப் பொருத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான கருத்துக்களை வான்படையினர் எதிர்பார்க்கின்றனர்.

இதனிடையே வான் படையினர் விடுதலைப்புலிகளின் ஒவ்வொரு வான் தாக்குதல்கள் தொடர்பாகவும் விசாரணைகளை நடாத்துவதற்கு வேறுபட்ட விசாரணைக் குழுக்களை அமைத்து வருகின்றனர். அதில் விடுதலைப்புலிகளின் முதலாவது வான் தாக்குதலின்போது வான் கலங்கள் தொடர்பான தகவல்களைக் குறிப்பிட்ட அதிகாரிகளிடம் வழங்குவதற்கு தவறியது தொடர்பாக விசாரணைகள் நடைபெறுகின்றன.

தாக்குதலில் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதில் ஏற்பட்ட தாமதங்கள், தாழப்பறக்கும் வானூர்திகளைக் கண்டறிய முடியாத 2டி ராடர்களை கொள்வனவு செய்த வான்படை அதிகாரிகள் மீதான விசாரணைகள் என பல விசாரணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் முடிபில் போதிய ஆதாரங்கள் கிடைக்குமாயின் அது தொடர்பான வான்படை அதிகாரிகள் மீது குற்றங்கள் சுமத்தப்படுவதுடன் அவர்கள் இராணுவ நீதிமன்ற விசாரணைகளையும் எதிர்கொள்ள நேரிடும் என்று அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## ✪பல்கலைக்கழகத்தினுள் ஆயுததாரிகள் நுழைவு
## ✪பாடசாலை மாணவர்கள் கடத்தல்
# கஜேந்திரன் - ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகத்தினுள் ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று அத்துமீறி நுழைந்தது குறித்தும் மாணவர்கள் கடத்தப்பட்ட சம்பவம் குறித்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்-ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். அதன் விபரம் வருமாறு,

கடந்த சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்தின் பின்புற சுற்று மதிலைத் தாண்டி அத்துமீறி உள் நுழைந்த சிவில் உடை அணிந்த ஆயுததாரிகள் பல்கலைக்கழக மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியினுள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய அலுவலகத்தினை உடைத்து சோதனையிட்டுள்ளனர்.

அத்துடன் கடந்த 8 மாதத்தில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்த மூன்று பல்கலைக்கழக மாணவர்களின் படங்களையும் அடித்து நொருக்கியுள்ளனர். அது மட்டுமன்றி கிழக்கு மாகாணத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கு உதவுவதற்காக நிதி சேகரிப்பதற்காக வைக்கப்பட்டிருந்த உண்டியலையும் உடைத்து அதனுள்ளிருந்த பணத்தினை எடுத்துச் சென்றுள்ளனர். அத்துடன் பல்கலைக்கழகத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகஸ்தரை கடுமையாகத் தாக்கியும் உள்ளனர்.

கடந்த 4 ஆம் திகதி இரவு ஆயுதங்களுடன் வீடுகளை உடைத்துக் கொண்டு உள் நுழைந்த ஆயுததாரிகள் வீட்டிலிருந்த 18 வயதுள்ள பாடசாலை மாணவர்கள் இரண்டு பேர் உட்பட 5 இளைஞர்களைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளனர்.

கடத்தப்பட்டவர்களில் சிலரிடம் ஏற்கனவே மேற்படி ஊரெழு இராணுவ முகாமைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் அணியினர் குறித்த நபர்கள் தொடர்பாக விசாரணை நடத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவங்களின் அடிப்படையில் நோக்கும்போது இளைஞர்கள் கடத்தப்பட்டமைக்கும் பல்கலைக்கழகத்தினுள் நுழைந்து பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தாக்கப்பட்டு சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டமைக்கும் ஊரெழு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினருக்கும் தொடர்புகள் இருப்பதாகவே நாம் கருதுகின்றோம்.

இது தொடர்பாக விரைவான நடவடிக்கை எடுத்து கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதற்கு ஆவன செய்யுமாறு அவசர வேண்டுகோள் விடுக்கின்றேன். பல்கலைக்கழக சமூகத்தினரும் பாடசாலை சமூகத்தினரும் தொடர்ச்சியாக இராணுவ வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பாக தங்களுக்கு பல தடவைகள் எழுத்து மூலம் அறிவித்துள்ள போதிலும் இதுவரை ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இதனால் தமிழ் மாணவர்களின் கல்வி முழுமையாகப் பாதிக்கப்படுகின்றது. இவ்வாறான அச்சுறுத்தல்கள் காரணமாக ஊழியர்கள், விரிவுரையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் குடாநாட்டினை விட்டு வெளியேறி வருகின்றனர்.

தமிழ் மாணவர்களின் கல்வி எதிர்காலத்தினை கருத்திற் கொண்டு கல்விச் சமூகத்தின் மீதான வன்முறைகளைத் தடுத்து நிறுத்தி அவர்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகின்றேன். இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# கொக்கட்டிச்சோலை கிளைமோர்த் தாக்குதலில் 3 அதிரடிப் படையினர் பலி; 4 பேர் படுகாயம்

கொக்கட்டிச்சோலையில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் அதிரடிப் படையைச் சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டனர். 4 பேர் படுகாயமடைந்தனர்.

கொக்கட்டிச்சோலையிலிருந்து மட்டக்களப்புக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் சிறப்பு அதிரடிப் படையினர் உழவு இயந்திரத்தில் பயணித்த போது இத்தாக்குதல் நடத்தப்பட்டது. இத் தாக்குதலில் படுகாயமடைந்த 4 அதிரடிப் படையினரும் மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பாரிய சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையை அதிரடிப் படையினர் மேற்கொண்டனர். இதனிடையே அதிரடிப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே களுவாஞ்சிக்குடி போரதீவுப் பகுதியில் நேற்று அதிகாலை 4 மணிக்கு மோதல் நடந்ததாக களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ந-5)

# பொலிஸ் - விமானப் படையின் இணைப்பதிகாரியாக பாலசூரிய

பொலிஸ் மற்றும் விமானப்படைக்கிடையேயான இணைப்பு அதிகாரியாக பிரதி பொலிஸ்மா அதிபரான மகிந்த பாலசூரிய நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. நாட்டில் எந்த ஒரு பகுதியிலேனும் சந்தேகத்திற்கிடமான விமானங்கள் பறப்பதைமக் கள் அவதானித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குத் தகவல் வழங்கும் பட்சத் தில் தகவல்கள் தொடர்பாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலிசூரிய, விமானப் படைப் பிரிவுக்குத் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பார்.

இதனையடுத்து விமானப் படைப் பிரிவு சந்தேகத்திற்கிடமாகப் பறந்த விமாணம் குறித்து ஆராயும்.

பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புடைய விமானங்களாக அவை காணப்படின் அதனைத் தடுக்க பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

# மர்ம விமானம் மக்கள் பீதி

(கொழும்பு)

வடமேல் மாகாணப் பகுதியில் மர்ம விமானம் ஒன்று பறந்ததால் அப்பகுதி மக்கள் பீதியடைந்துள்ளனர்.

வடமேல் மாகாணத்தின் இன்கினிமிட்டிய அணைக்கட்டுக்குமேல் கடந்த வெள்ளிக் கிழமை முற்பகல் 9.30 முதல் 10.30 வரை இலகு ரக விமானம் ஒன்று வட்டமிட்டதாக அப்பகுதி மக்கள் இராணுவத்தினருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அப் பகுதியில் இராணுவத்தினர் உலங்குவானூர்தி மூலம் பறப்பில் ஈடுபட்டனர். மேலதிகமாக இராணுவ உயர் அதிகாரிகளும் அப்பகுதிக்கு விரைந்து சென்றுள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பீதி ஏற்பட்டது. (ந-5)

# தமிழக மீனவர்களை தாக்கும் எண்ணம் கடற் புலிகளுக்கு இல்லை -தினமணி

(சென்னை)

தமிழக மீனவர்களை தாக்கும் எண்ணம் கடல் புலிகளுக்கு இல்லை என்று உளவுத் துறை தகவல்கள் தெரிவிப்பதாக தமிழகத்தில் இருந்துவெளியாகும் தினமணி நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதே சமயம் கடற்புலிகளிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட படகில் இருந்து அதி நவீன பராசூட் நங்கூரத்தை கியூப் பிரிவுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பராசூட் நங்கூரங்களை ராணுவம் தான் பயன்படுத்தும் எனவே இது விடுதலைப்புலிகளின் படகுதான் என்பது மேலும் உறுதியாகிறது. படகில் பழுது ஏற்படும்போது இந்த பராசூட் நங்கூரம் பயன்படுத்தப்படும். இது காற்றில் நகராமல் இருக்க உதவும் என்று உளவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்ததாக தினமணிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. தமிழக கியூப் பிரிவுப் பொலிஸ் பிடியில் உள்ள கடல் புலிகளின் பெயர், முகவரி மற்றும் விடுதலைப்புலிகளின் அமைப்பில் வைக்கப்பட்டுள்ள பெயர் உள்ளிட்ட முக்கிய தகவல்களை தினமணி வெளியிட் டுள்ளது.

அதன் விபரம் வருமாறு, றொபின்சன் (திருமேனி) மன்னார் மாவட்டம், போனிபாஸ் (செல்வாணன்) யாழ்ப்பாணம், ரவிக்குமார் (மாதவன்) வவுனியா, அருள் (கடலரசன்), முல்லைத்தீவு, அருள்ஞானதாஸ் (தாசன்) யாழ்ப்பாணம், செல்வக்குமார் (கலையரன்) புதுக்குடியிருப்பு. (ந-5)


## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## 2007 ஆம் ஆண்டுக்கான வழங்கலுக்கான கூறுவிலைகள் கோருதல்

மாவட்டச் செயலக, பிரதேச செயலகங்களின் பாவனைக்காக கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் பொருட்களுக்கான கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 100/= வும் மீளளிக்கக்கூடிய பணமாக ரூபா 5000/=வும் செலுத்துதல் வேண்டும்.

இச் செயலகத்தால் வழங்கப்படும் மாதிரிப்படிவத்தில் கேட்டுக்கொண்ட விபரங்களுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 2007.05.23 ஆம் திகதி பகல் 10.30 மணிக்கு முன்னர் இச் செயலகத்தில் கிடைக்கக் கூடியதாக **“தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்”** என்று பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாக இச் செயலகத்தின் மேலதிக மாவட்ட செயலர் (நிதி) அவர்களின் அறையிலுள்ள கேள்விப் பெட்டியிலோ இடலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **2007 ஆம் ஆண்டுக்கான தளபாடங் கள், அலுவலக உபகரணங்கள் வழங்கலுக்கான** கூறுவிலைகள் என எழுதப்பட வேண்டும். 2007.05.23 ஆம் திகதி பகல் 11 மணிக்கு கேள்விகள் திறக்கப்பட்டு விண் ணப்பித்தவர் முன்னிலையில் வாசிக்கப்படும்.

அப்போது விண்ணப்பித்தவரோ அல்லது அவரது முகவரோ சமுகமளிக்கலாம். வழங்கல் கட்டளை கிடைத்து 01 மாதத்திற்குள் பொருட்கள் யாவும் இச் செயலகத்தில் உள்ள களஞ்சியக் காப்பாளரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்களை 07.05.2007 ஆம் திகதி தொடக்கம் மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம்.

தளபாடங்களுக்கான மாதிரிகளை/ படங்களை இச் செயலகத்திலுள்ள களஞ்சிய நலன்புரிக் கிளையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். மாதிரிக்கொவ்வாத பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**01. மரத்தளபாடங்கள் (வேம்பு)**
1. அலுவலக மேசை - இரு லாச்சியுடன் (4’X2 1/2’)
2. பதவி நிலை உத்தியோகத்தர் மேசை
3. கைபிடிக்கதிரை
4. சாதாரண் கதிரை
5. மாநாட்டு மண்டபக் கதிரைகள்
6. கணனி மேசை
7. கோவை றாக்கைகள்
8. சார்மனை வாங்கு

**02. உருக்குத் தளபாடங்கள்**
1. அலுமாரி (6’X3’ X 1 1/2’)
2. அலுவலக மேசை
3. கணனி கதிரை
4. கோவை அலுமாரி

**03. பிளாஸ்ரிக் தளபாடங்கள்**
1. பிளாஸ்ரிக் கதிரை கைபிடி உள்ளது.

**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

**கே.கணேஷ்**
**அரசாங்க அதிபரும்,**
**மாவட்டச் செயலாளரும்.**

(C-042)


# அதிகாரம் எதுவும் என்னிடம் தரப்படவில்லை உயர் கல்வி பிரதி அமைச்சர் ஆதங்கம்

(கொழும்பு)

தான் பிரதி அமைச்சர் பதவி வகிக்கின்ற போதிலும் கடமைகளை புரிவதற்கான வழிவகைகள் இன்றி ஒதுங்கியே இருப்பதாக உயர் கல்வி பிரதி அமைச்சர் மயோன் முஸ்தப்பா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அவர் இதனைக் கூறியுள்ளார். தெரிந்தெடுக்கப்பட்ட நிலையில் அலங்காரம் செய்வதற்கு குந்திக் கொண்டிருக்கின்றேனே தவிர எனக்குரிய அதிகாரங்கள் இன்னமும் வழங்கப்படவுமில்லை, கடமைகள் அளிக்கப்படவுமில்லை என தெரிவித்த பிரதி அமைச்சர் இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் உரிய அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

தனக்கு வழங்கப்பட்டுள்ள பதவியினை செய்வதற்கு உரிய அதிகாரங்களும் வழங்கப்படவேண்டும். குறிப்பாக வடக்கில் உள்ள பல்கலைக்கழகங்கள் உயர் தொழில் நுட்பக் கல்வியினுடைய பொறுப்பையாவது வழங்க வேண்டும். இன்று எமது அமைச்சில் இடம் பெறுகின்ற விடயங்களுக்கும் எனக்கும் தொடர்புகள் இல்லாமல் நான் ஒரு அறைக்குள் குந்திக் கொண்டிருக்கின்றேன் என்றும் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தப்பா குறிப்பிட்டார். (ந-3)

## மன்னாரில்...

தேவாலயமொன்றில் தஞ்சமடைந்துள்ளனர்.

அப் பகுதியில் நேற்று வீழ்ந்த எறிகணையினால் மூன்று பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும் இவர்களில் காயமடைந்த பெண்ணொருவர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு நேற்று மாலை கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-3,5)

## கட்டுநாயக்க...

பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு விடுதலைப்புலிகள் கட்டுநாயக்க விமானத்தளத்தை குறிவைத்து தாக்குதல் நடாத்தக்கூடும் என்ற அச்சத்தால் அடிக்கடி கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை மூடவேண்டியிருப்பதால் எழுந்திருக்கும் சிக்கல்களை தவிர்க்கும் நோக்குடனும் கட்டுநாயக்க விமானப் படைத்தளத்தின் சில பகுதிகளை ஹிங்குராங்கொட விமானப்படைத் தளத்திற்கு மாற்றப்படுவதாகவும் கூறப்படுகின்றது. (ந-5)

## இராணுவத்தில்...

கேணல் பிரசன்ன சில்வாவுக்கும் இராணுவத் தலைமைக்கும் மன்னார் நடவடிக்கைகள் தொடர்பில் முரண்பாடுகள் ஏற்பட்டதையடுத்து அவர் பணி ஓய்வு பெற்றார்.

வாகரை மற்றும் சம்பூர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட சிறப்புப் படையினரை மன்னார் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த பிரசன்ன சில்வா விரும்பவில்லை. இதனை இராணுவத் தலைமை நிராகரித்தது. ஆகையால் பிரசன்ன சில்வா பணி ஓய்வு பெறுவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து தற்போது நிர்மல் தர்மரட்ன அப்பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார். (ந-5)

## அளவெட்டியில்...

தந்தையுமான பொன்னம்பலம் ஜெயசீலன் (வயது 36) என்ற குடும்பஸ்தரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என அம் முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## மகிந்தவின் அவசர செய்தியுடன்...

இந்திய வான்படை வானூர்தி மூலம் ஒரு குழுவினர் வந்துள்ளனர்.

இந்திய அரசாங்கத்தால் இலங்கைக்கு இலவசமாக வழங்கப்பட்ட 2டி ராடர் செயற்பாடுகள் குறித்து அந்தக் குழுவினர் ஆலோசனை நடத்தியுள்ளனர். மேலும் இலங்கை கோரியிருந்த மூன்றாவது 2டி ராடர் குறித் தும் இந்திய அதிகாரிகள் கவனம் எடுத்துள் ளனர்.

இதனிடையே பிரித்தானியப் பிரதமர் ரொனி பிளேயர் மகிந்தவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இலங்கை அமைதி முயற்சிகளை மீளத்தொடங்க நோர்வே அனுசரணையாளர்களுடன் இணைந்து உதவ தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விவாதிக்க ரொனி பிளேயரின் சிறப்புத்தூதுவர்கள் கொழும்புக்கு வருகை தரவுள்ளனர். மகிந்தவுக்கான ரொனி பிளேயரின் கடிதத்தை கொழும்பில் உள்ள பிரித்தானியத் தூதுவர் டொமினிக் சில்கொட மகிந்தவிடம் ஒப்படைத்தார். (ந-5)

## கண்காணிப்புக்...

உயிரிழந்துள்ளனர். 2002 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச் சாத்திட்ட போது இருந்த சூழலைவிட நேர் மாறான சூழ்நிலை தற்போதுள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கும் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் சவால் விடும் வகையில் வடக்குக்கிழக்கின் அடிப் படை நிலைமை மாறியுள்ளது.

இரு தரப்பினரும் பேச்சுக்களை நடாத்த விருப்பம் தெரிவித்துள்ளனர். ஆனால் இரு தரப்பும் நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருக்கின்றனர். இரு தரப்பும் விரைவில் பேச்சுக்களுக்கு திரும்புவர் என்றார் சொல்பேர்க். (ந-5)

## குடும்பஸ்தர்...

கொல்லப்பட்டவராவார்.

கடையில் பொருட்களை வாங்கிவிட்டு குறித்த வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே இவர் கொல்லப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு இளவாலை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-49)

## தமிழர்களின் தனி அரசை...

இலங்கையை இரு பகுதிகளாக இந்தியா பார்க்க விரும்பவில்லை. இலங்கையின் பிரதேச ஒற்றுமை என்பது நமக்குத் தேவையானது. இலங்கை ஒரே நாடாக இருக்க இந்தியா எந்த உதவியையும் செய்ய வேண்டும்.

இந்தப் பிராந்தியத்தில் எந்த ஒரு நாட்டினது அரசியல் நிலையற்ற தன்மையும் இந்தியாவைப் பாதிக்கும். இலங்கையிலிருந்து பெருமளவு அகதிகளை இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது. அதே நேரத்தில் இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதும் கடத்தப்படுவதும் நடைபெறுகிறது.

பெரும்பான்மைச் சிங்களவர்கள் இராணுவ வழித் தீர்வை நம்புவது வருத்தத்திற்குரியது. இனப்பிரச்சினைகளில் இராணுவ வழித்தீர்வு காண முடியாது என்றார் ராகவன். (ந-5)

## இலங்கை அரசு மீது...

நாளைய தினம் கொழும்பு வரும் இவர் இலங்கை அரசாங்கத்தை பேச்சுமேசைக்குத் திரும்பும்படியாக கடுமையான ஒரு செய்தியை எடுத்துவரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அர சாங்க அதிகாரிகளை றிச்சட் பௌச்சர் சந்திப்பதுடன் இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தனது கடுமையான நிலைப்பாட்டைத் தெரி விக்கவுள்ளார்.

நாளையும் நாளை மறு தினமும் தொடர்ச்சியான உயர் மட்ட சந்திப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் அவர் யாழ்.குடாநாட்டிற்கும் செல்வார் எனக் கூறப்படுகின்றது. பௌச்சர் மீண்டும் அமெரிக்கா செல்வதற்கு முன்னர் எதிர்வரும் வியாழக்கிழமை ஊடகவியலாளர்களை சந்திக்கவுள்ளார்.

நாடு மிக மோசமான மனித உரிமை மீறல்களை எதிர்கொண்டுள்ள நிலையிலும் பிரித்தானியா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் மனித உரிமை மீறல்களை காரணம் காட்டி இலங்கைக்கான உதவித் தொகைகளையும் நிறுத்தியுள்ள நிலையில் பௌச்சரின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது. றிச்சட் பௌச்சரின் இலங்கைக்கான பயணத்தின் போது மாலை தீவுக்கும் செல்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-3,5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.